திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை, வட்ட தலை நகராகக் கடந்த 15 ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டு வந்தாலும் அங்கே குற்றவியல் நீதிமன்றம்தான் செயல்பட்டு வருகிறது; உரிமையியல் நீதிமன்றம் இல்லை என்று பொதுமக்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது. எனவே அங்கே உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். ஆயினும் உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

உதகமண்டலத்தில் நீதிமன்ற வளாகம் கட்டுதல்.

*9355—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உதகமண்டலத்தில் எல்லா நீதிமன்றங்களும் ஒரே கட்டிடத்தில் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உதகமண்டலத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த, நூற்றாண்டு கடந்த ஒரு மிகவும் பழைய கட்டடத்தில் சார்நீதி மன்றம் இயங்கி வந்த இடத்திலே தற்போது மாவட்ட நீதி மன்றமும், உரிமை இயல் நீதி மன்றமும் போதிய வசதிகள் இல்லாமல் இயங்கி வந்துகொண்டிருக்கிறது. மேலும் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று ஒரு பழங்காலக் கட்டடத்தில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இயங்கி வருகிறது. தற்போது தாவாக்களும் குற்றங்களும் அதிகரித்து வருவதாலும் மாவட்ட மக்களுக்கு பயன்படும் வகையில் எல்லா நீதி மன்றங்களும் ஒரே கட்டடத்தில் தக்க வசதிகளுடன் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் ஒன்று இந்த ஆண்டில் அரசு நிறுவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தசைவரவர்களே, உதகமண்டலத்தில் ஒருங்கிணை த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பை அரசு பரிசிலித்தது. இதற்

காகும் தொகை, இந்த லேண்ட் அக்குவிசிசன் மற்றும் அதில் ஏற்படக்கூடிய செலவு ரூ.1,03,79,800 என்று அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவு செலவு செய்ய வாய்ப்பு இல்லாததனால், அரசாங்கத்தின் இடத்திலேயே கட்ட முடியுமா என்ற ஒரு குறிப்பு ஆராயப்பட்டது. ஜெயில் ஹில் என்ற இடத்தில் 22 செண்ட் நிலம் உள்ளதாகவும், அதில் நீதிமன்றக் கட்டடம் அமைக்க முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் போதுமானதாக இல்லை என்று இப்போது தெரிவிக்கப் பட்டு இருக்கிற காரணத்தினாலே மீண்டும் தனியார் இடத்தைக் கையகப்படுத்துவதற்கு செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே இடம் கையகப்படுத்துவதற்கு, லேண்ட் அக்குவிசிசன் காம்பன்சேசன் அதிகமாகவும், இடம் கிடைப்பது அரிதாகவும் இருக்கின்ற காரணத்தால் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் எத்தனை ஆண்டுக்குள் இந்த வளாகம் வரும் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த இடத்திற்கு மாத்திரம் ஒரு கோடி ரூபாய் என்பது சாத்தியமாக இல்லை. நிதி நிலைமை அனுமதிப்பதாக இல்லை. ஆனால் கூடுமான வரையில் இதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற அளவில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. மு. கு. கரீம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்தில் அத்தகைய புது கட்டடம் வருகின்ற நேரத்தில் பிளான்டேஷன் லேபர் கோர்ட்டையும் அதில் கொண்டு வர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் அடிக்கல் போட்டு கட்டடம் எழுப்பிய பிறகு அதைப் பற்றி கவனிக்கலாம்.

சேலம்—பெங்களூர் அகல ரயில் பதை.

*10464—திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் இருந்து தர்மபுரி வழியாக பெங்களூருக்கு அகல ரயில்பாதை அமைக்க மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே,